00949

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025**

**இறுதிப் பரீட்சை – 2024/2025**

# STP8404/STP8504/ESP2204 – கல்வித் தொழில்நுட்ப அடிப்படைகள்

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி:- 04.05.2025** **நேரம்: மு.ப 09.30 - பி.ப 12.30**

- **இந்த வினாத்தாளில் மூன்று (03) பகுதிகள் உள்ளன.**
- **மாணவர்கள் பகுதி – I இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும், பகுதி – II இல் உள்ள ஏதேனும் இரண்டு (02) வினாக்களுக்கும் (09 – 12) மற்றும் பகுதி – III இல் உள்ள ஏதேனும் இரண்டு (02) வினாக்களுக்கும் (13 – 16 சிறப்பு முறைகள்) விடையளிக்க வேண்டும்.**
- **மொத்தத்தில், மாணவர்கள் பதினாறு (16) வினாக்களில் பன்னிரண்டு (12) வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டும்.**
- **விடைத்தாள் புத்தகத்தின் முதல் பக்கத்தின் மேல் வலது பக்கத்தில், விசேட முறைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடத்தைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.**

## பகுதி I

**1.** “தொழில்நுட்பத்தைப்பற்றி கற்றல்”, “தொழில்நுட்பத்திலிருந்து கற்றல்”, மற்றும் “தொழில்நுட்பத்துடன் கற்றல்” ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டைச் சுருக்கமாக விளக்குக.

**2.** கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒரு தொடர்பாடல் சுழற்சியாகக் கருதலாம், இதில் அனுப்புநர் மற்றும் பெறுநர் இடையே தகவல் பரிமாற்றப்படுகிறது. கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது மாணவர்களுடன் வினைத்திறன் மிக்க தொடர்பாடலை பராமரிக்க நீங்கள் பயன்படுத்தக்கூடிய **ஐந்து** (05) முறைகளைக் குறிப்பிடுக.

**3.** உருவாக்கும் செயற்கை நுண்ணறிவு (Generative Artificial Intelligence – GenAi) கல்வியில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. உங்கள் கற்பித்தலில் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** (02) GenAi கருவிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு, வகுப்பறையில் இக்கருவிகளைப் பயன்படுத்தும்போது பின்பற்ற வேண்டிய **மூன்று** (03) ஒழுக்கநெறிமுறைகளைக் குறிப்பிடுக.

**4.** “அர்த்தமுள்ள கற்றல்” என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்கி, உங்கள் மாணவர்களிடையே அர்த்தமுள்ள கற்றலை ஊக்குவிக்க நீங்கள் பயன்படுத்தும் **நான்கு** (04) மூலோபாயங்களைக் குறிப்பிடுக.

**5.** ஒரு பாடத்திட்டமிடலை உருவாக்குவது பயனுள்ள கற்பித்தலுக்கு அவசியமானது. நன்கு தயாரிக்கப்பட்ட பாடத்திட்டமிடல் ஒரு வெற்றிகரமான பாடத்தை வழங்க உதவும் **ஐந்து** (05) வழிகளைச் சுருக்கமாக விளக்குக.

**6.** “கற்றல் பேறு” என்ற பதத்தை வரைவிலக்கணம் செய்து, உங்கள் கற்பித்தல் பாடத்திற்கான கற்றல் பேறுகளை எழுதும் போது கருத்தில் கொள்ள வேண்டிய **நான்கு** (04) அம்சங்களை ஓர் உதாரணத்துடன் சுருக்கமாக விவரிக்குக.

7. உங்கள் கற்பித்தலில் புதிய தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கும் போது நீங்கள் எதிர்நோக்கிய **மூன்று (03)** சவால்களை இனங்கண்டு, அவ்வொவ்வொரு சவாலையும், தலா **ஒரு (01)** நடைமுறை தீர்வை பரிந்துரைக்குக.

8. "டேலின் அனுபவக் கூம்பு" என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்கி, உங்கள் பாடங்களைத் திட்டமிடும் போது அதைப் பயன்படுத்துவதன் **நான்கு (04)** நன்மைகளைக் குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. I. மாணவர் - மைய வகுப்பறைகளுக்கு கூட்டுநிலைக் கற்றலின் (Collaborative Learning) **இரண்டு** (02) நன்மைகளை விளக்குக. **(04 புள்ளிகள்)**

II. நீங்கள் கற்பிக்கும் ஒரு பாடத்திலிருந்து ஒரு பாட அலகைத் தெரிவு செய்து, அனைத்து மாணவர்களிடையே சமமான பங்கேற்பை உறுதி செய்யும் வகையிலான பணிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டுநிலைக் கற்றல் செயற்பாட்டை வடிவமைக்குக. **(05 புள்ளிகள்)**

III. உங்கள் பாடத்தில் கூட்டுநிலைக் கற்றல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது எழக்கூடிய **இரண்டு (02)** சாத்தியமான பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து, அவற்றை எவ்வாறு தீர்ப்பீர்கள் என்பதையும் விளக்குக. **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

10. I. கற்றல் - கற்பித்தல் கருவிகளைத் (Aids) தெரிவு செய்யும் போது ஓர் ஆசிரியர் கருத்திற் கொள்ள வேண்டிய **நான்கு** (04) காரணிகளை விளக்குக. **(04 புள்ளிகள்)**

II. வெவ்வேறு வகையான கற்பித்தல் கருவிகளை வகைப்படுத்தி, ஒவ்வொரு வகையையும் உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

III. "கற்றல் - கற்பித்தல் கருவிகள் வெறும் துணைக் கருவிகள் அல்ல, மாணவர்களிடையே அறிவுக் கட்டமைப்பை ஆதரிக்கும் அத்தியாவசியக் கூறுகள் ஆகும்." என்ற கூற்றை விமர்சன ரீதியாக மதிப்பிடுக. உங்கள் விடையினை **மூன்று** (03) பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

11. I. 21ஆம் நூற்றாண்டின் கற்றல் திறன்களான 4C' களை விவரித்து, தற்கால கல்வியில் அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக. **(04 புள்ளிகள்)**

II. நீங்கள் கற்பிக்கும் ஒரு பாடத்திலிருந்து ஒரு பாட அலகைத் தெரிவு செய்து, மாணவர்களிடையே 4C' களை விருத்தி செய்வதற்காக தொழில்நுட்பத்தை எவ்வாறு ஒருங்கிணைப்பீர்கள் என்பதை குறிப்பிட்டு உதாரணங்களுடன் விவரிக்குக. **(05 புள்ளிகள்)**

**III.** உங்கள் வகுப்பறையில் மாணவர்களிடையே 4C' களை மேம்படுத்த தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கும் போது நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய **மூன்று** (03) முக்கிய சவால்களைக் குறிப்பிட்டு, அவற்றைத் தீர்க்க செயற்படுத்தக்கூடிய உத்திகளை முன்மொழிக.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**12. I.** "முழு வகுப்புக் கற்பித்தல்" மற்றும் "குழுக் கற்பித்தல்" என்ற எண்ணக்கருக்களை உங்கள் வகுப்பறை சூழலிலிருந்து ஒவ்வொன்றுக்கும் ஓர் உதாரணத்துடன் விளக்குவதன் மூலம் வேறுபடுத்துக. **(04 புள்ளிகள்)**

**II.** குழுக் கற்பித்தலை திறம்பட செயற்படுத்த நீங்கள் ஓர் ஆசிரியராகப் பயன்படுத்தும் **நான்கு** (04) உத்திகளை உங்கள் உண்மையான வகுப்பறைச் சூழலிலிருந்து ஓர் உதாரணத்துடன் விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**III.** குழுக் கற்பித்தலைப் பயன்படுத்தும் போது ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) பொதுவான சவால்களைப் பட்டியலிட்டு, அவற்றை சமாளிக்க நடைமுறைத் தீர்வுகளை முன்மொழிக. உங்கள் தீர்வுகளை உதாரணங்களுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

## பகுதி – III

**13. I.** TPACK- இன் **மூன்று** (03) முக்கிய கூறுகளைக் குறிப்பிடுவதன் மூலம் TPACK என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விவரித்து, உங்கள் பாடத்தின் வினைத்திறனாக கற்பித்தலில் அதன் முக்கியத்துவத்தை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**II.** உங்கள் பாடத்திலிருந்து ஒரு பாட அலகைத் தெரிவு செய்து, TPACK கட்டமைப்பின் அடிப்படையில் ஒரு பாடவேளை திட்டத்தை வடிவமைத்து, உங்கள் பாடஅலகில் TPACK- இன் **மூன்று** (03) முக்கிய கூறுகளை எவ்வாறு ஒருங்கிணைப்பீர்கள் என்பதை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**III.** பகுதி (II) இல் விவரித்த உங்கள் பாட அலகில் TPACK ஐ செயற்படுத்துவதில் **இரண்டு** (02) சாத்தியமான சவால்களைக் குறிப்பிட்டு, இச்சவால்களை சமாளிக்க நடைமுறைத் தீர்வுகளை முன்மொழிக. **(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**14. I.** COVID-19 பெருந்தொற்றுக்குப் பிறகு தொலைதூர கற்றல் செயற்பாடுகள் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களிடையே பிரபலமடைந்தன. நீங்கள் கற்பிக்கும் பாடத்துடன் தொடர்புடைய தொலைதூர கற்றலுக்காக உங்கள் மாணவர்களுடன் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** (02) வீடியோ கலந்துரையாடல் கருவிகள் மற்றும் **இரண்டு** (02) நிகழ்நிலை மதிப்பீட்டு கருவிகளைப் பற்றி விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**II.** வீடியோ கலந்துரையாடல் கருவிகளைப் பயன்படுத்தி நிகழ்நிலை பாடங்களை நடத்தும் போது மாணவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்த **ஐந்து (05)** உத்திகளை விவரிக்குக.

**(05 புள்ளிகள்)**

**III.** நிகழ்நிலை கலந்துரையாடல் கருவிகளைப் பயன்படுத்தும் போது நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய **மூன்று (03)** சவால்களை பட்டியலிட்டு, உங்கள் மாணவர்களுக்கு ஓர் இலகுவான கற்றல் அனுபவத்தை உறுதி செய்யும் வகையில் ஒவ்வொன்றையும் எவ்வாறு தீர்ப்பீர்கள் என விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**15. I.** கற்பித்தலில் செயற்திட்ட முறையை வரையறுத்து, அது பாரம்பரிய முறைகளிலிருந்து வேறுபடும் **மூன்று (03)** முக்கிய பண்புகளை பட்டியலிடுக. **(05 புள்ளிகள்)**

**II.** உங்கள் பாடத்திலிருந்து ஒரு பாட அலகைத் தெரிவு செய்து, அளவிடக்கூடிய கற்றல் பேறுகள், மாணவர் கற்றல் செயற்பாடுகள் மற்றும் பொருத்தமான மதிப்பீட்டு பணிகளை உள்ளடக்கிய ஒரு செயற்திட்ட - அடிப்படையிலான கற்றல் அனுபவத்தை வடிவமைக்குக.

**(06 புள்ளிகள்)**

**III.** மேலே (II) இல் குறிப்பிட்டதை செயற்படுத்தும் போது நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய **இரண்டு (02)** சவால்களை பகுப்பாய்வு செய்து, அவற்றைச் சமாளிக்க குறிப்பான உத்திகளை முன்மொழிக.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**16. I.** "கட்டமைப்பு சீரமைப்பு" (Constructive Alignment) என்ற எண்ணக்கருவினை விளக்கி, உங்கள் மாணவர்களுக்கான கற்றல் அனுபவங்களை வடிவமைப்பதில் அதன் முக்கியத்துவத்தை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**II.** உங்கள் பாடத்திலிருந்து ஒரு பாட அலகுக்கான தலைப்பை தெரிவு செய்து, உங்கள் பாட அலகில் கட்டமைப்பு சீரமைப்பை பிரதிபலிக்கும் விரிவான கற்றல் அனுபவத்தை வடிவமைக்குக.

**(06 புள்ளிகள்)**

**III.** இந்த பாடவேளைத் திட்டத்தை செயற்படுத்துவதில் **இரண்டு (02)** சாத்தியமான சவால்களை விவரித்து, அவற்றை சமாளிக்க நடைமுறைத் தீர்வுகளை முன்மொழிக.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -



59